செ.வெ. எண்: 347 நாள்: 19.06.2012

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று (19.6.2012) தலைமைச் செயலகத்தில், தமிழகம் முழுவதும் நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை சார்பில் 172 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 35 புதிய பாலங்களையும், திருச்சி மாவட்டத்தில் 9 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள துறையூர் புறவழிச்சாலையையும் காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக திறந்து வைத்தார்கள்.

ஒரு மாநிலத்தின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளில் சாலைக் கட்டமைப்பு வசதி முக்கிய பங்கினை வகிக்கிறது. சாலை கட்டமைப்பு வசதியின் முக்கியத்துவத்தை உணர்ந்து, மாநிலம் முழுவதும் புதிய பாலங்களை கட்டுவதிலும், சாலைகள் மற்றும் பாலங்களை பராமரிப்பதிலும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு முனைப்புடன் செயல்பட்டு வருகிறது.

அதன் அடிப்படையில் போக்குவரத்து மேம்பாட்டிற்காக, கோயம்புத்தூர் மாவட்டம், போத்தனூர் – மதுக்கரை இரயில் நிலையங்களுக்கு இடையேயான இரயில்வே கடவுக்கு பதிலாக சுந்தராபுரத்தில் 15 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம்; தொண்டாமுத்தூர் தொகுதியில் இருட்டுப்பள்ளத்தில் நொய்யல் ஆற்றின் குறுக்கே 2 கோடியே 53 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் தொகுதி, காட்டரம்பாக்கத்தில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; கன்னியாகுமரி மாவட்டம், ஆண்டித்தோப்பில் குறுகிய வலுவிழந்த பாலத்தினை 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்து கட்டப்பட்டுள்ள பாலம்; மற்றும் விளவங்கோடு தொகுதி, மார்த்தாண்டம்துறையில் 1 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதுப்பித்து கட்டப்பட்டுள்ள பாலம்; திருநெல்வேலி மாவட்டம், தென்காசி தொகுதி, ஆசாத் நகர் சிற்றாற்றின் குறுக்கே 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள உயர்மட்டப் பாலம்; மற்றும் அம்பாசமுத்திரம் தொகுதி, சேரன் மகாதேவி ஆற்றுச் சாலையில் தாமிரபரணி ஆற்றின் குறுக்கே 8 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளத்தில் 13 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வைப்பாற்றில் கட்டப்பட்டுள்ள பாலம்; விழுப்புரம் மாவட்டம், பையூர் கோரையார் ஆற்றின் குறுக்கே 10 கோடியே 79 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி தொகுதி, குன்னத்தூரில் 7 கோடியே 30 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; மற்றும் செங்கம் தொகுதி, போந்தையில் 1 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டி தொகுதி, பொம்மிடியில் 10 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இரயில்வே கடவுக்கு பதிலாக கட்டப்பட்டுள்ள மேம்பாலம்; மற்றும் மல்லமாபுரத்தில் தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே 5 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூரில் 3 கோடியே 40 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் லட்சுமணப்பட்டியில் கட்டப்பட்டுள்ள பாலம்; ஈரோடு மாவட்டம், கோபி தொகுதி, நம்பியூரில் 95 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; மற்றும் மூணாம்பள்ளியில் 78 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; மொடக்குறிச்சி தொகுதி, எழுமாத்தூரில் 90 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, வேலக்காநத்தத்தில் 2 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

மற்றும் லால்குடி தொகுதி, சிறுகளப்பூரில் 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை தொகுதி, நம்பிவயலில் 1 கோடியே 94 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; மற்றும் பரக்கலாக்கோட்டையில் 1 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, மயிலையில் 1 கோடியே 99 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்;

திருப்பூர் மாவட்டம், காங்கேயம் தொகுதி, பழையகோட்டையில் 2 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; தாராபுரம் தொகுதி, தாசநாயக்கன்பட்டியில் 1 கோடியே 39 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; மற்றும் காரத்தொழுவில் 1 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; காங்கேயம் தொகுதி, கரைபுதூரில் 88 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; சேலம் மாவட்டம், தலைவாசல் தொகுதி காமக்காபாளையத்தில் 1 கோடியே 7 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; மற்றும் நல்லூரில் 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; ஏற்காடு தொகுதி, சலகண்டாபுரத்தில் 1 கோடியே 2 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; ஆத்தூர் தொகுதி, கீரிப்பட்டியில் 84 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; நாமக்கல் மாவட்டம், சங்ககிரி தொகுதி, மல்லசமுத்திரத்தில் 1 கோடியே 15 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; வேலூர் மாவட்டம், சோளிங்கர் தொகுதி, வாலாஜா இரயில்வே கடவுக்கு பதிலாக 15 கோடியே 50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேம்பாலம்; தஞ்சாவூர் – பெரம்பலூர் மாவட்டத்திற்கிடையே கும்பகோணம் மற்றும் ஜெயங்கொண்டத்தில், கொள்ளிடம் ஆற்றின் குறுக்கே நீலத்தநல்லூர் – மதனத்தூர் பகுதிகளை இணைக்கும் வகையில் 35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் வைகை ஆற்றின் குறுக்கே 10 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம்; திருவாரூர் மாவட்டம், கிளரியத்தில் 2 கோடியே 75 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாலம், என மொத்தம் 172 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 35 புதிய பாலங்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று தலைமைச் செயலகத்தில் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

மேலும், திருச்சி மாவட்டத்தில், 9 கோடியே 45 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள துறையூர் புறவழிச்சாலையையும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறைச் செயலாளர், தலைமை பொறியாளர் (நெடுஞ்சாலை) மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

******

வெளியீடு: இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை.
நாள்: 19.6.2012